**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C.106/2003**
**Deposition of witness for prosecution -PW-12**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.இளவேனில் |
| Husband Name | : | திரு.செல்வக்குமார் |
| Village | : | காரைக்குடி |
| Taluk | : | காரைக்குடி |
| Calling | : | ஆய்வாளர் |
| Religion | : | இந்து |
| Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of 19th day of January 2021

முதல் விசாரணை :-

நான் தற்போது இராமநாதபுரம் வணிக குற்றப்புலனாய்வு பிரிவில் ஆய்வாளராக பணியில் இருக்கிறேன். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொண்ட விசாரணை அதிகாரி திரு.பரமசிவம் மேற்படி இராமநாதபுரம் வணிக குற்றப்புலனாய்வு பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி உள்ளார். அவர் இறந்துவிட்ட படியால், அவர் பதிவு செய்து வைத்திருக்கும் ஆவணங்களை பார்த்து என்னால் சாட்சி சொல்ல இயலும். இவ்வழக்கில் கடந்த 16.04.2002ம் தேதியன்று காலை 10.30 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு.பரமசிவம் நிலைய பொறுப்பில் இருந்தபோது சேமனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் நடைபெற்ற முறைகேடு சம்மந்தமாக கொடுத்த புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண்.01/2002, சட்டப்பிரிவுகள் 408 r/w 34 இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்பு 16.04.2002ம் தேதி பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.99 ஆகும். அதன்பின்பு 12.05.2002ம் தேதி, சென்னையில் உள்ள வணிக குற்ற புலனாய்வு பிரிவு காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பிய பரமக்குடி துணைபதிவளார் திரு.ஞானபிரகாசம் என்பவரையும், 01.03.1993ம் தேதியன்ற செயல் முறை ஆணை உத்தரவுப்படி விசாரணை செய்ய உத்தரவிட்ட பரமக்குடி முன்னாள் துணை பதிவாளர் திரு.கிருஷ்ணசாமியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 15.06.2002ம் தேதியன்று சங்க நிர்வாக உறுப்பினர்களான திரு.முருகேசன், திரு.இராமமூர்த்தி மற்றும் சங்க எழுத்தர் திரு.கோபால் சாமி ஆகியோர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 11.07.2002ம் தேதியன்று சங்க நிர்வாகிகள் திரு.சாத்தையா மற்றும் திருமதி.காந்தியம்மாள், சங்க அட்டண்டர் திரு.கோவிந்தன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளர். அதன்பின்னர் 21.08.2002ம் தேதியன்று சங்க நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆரோக்கியம், இராஜேந்திரன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன்பின்னர் 16.09.2002ம் தேதியன்று சேமனூர் கூட்டுறவு வங்கியின் எழுத்தரான ராஜ ரத்தினம், கூடுதல் செயலர் சண்முகவேல் மற்றும் சேமனூர் கூட்டுறவு வங்கிக்கு உட்பட்ட அபுத்தூர் நியாயவிலைக் கடையின்

விற்பனையாளர் திரு.பி.பெரியசாமி மற்றும் சேமனூர் கூட்டுறவு வங்கி நடத்தி வரும் வைகை அங்காடியின் விற்பனையாளர் திரு.பி.கூத்தர், சேமனூர் நியாயவிலைக் கடையின் தினகூலி விற்பனையாளர் திருமதி.சேதுலெட்சுமி, சேமனூர் கூட்டுறவு வங்கியின் இரவு காவலர் பா.சண்முகவேல் மற்றும் சேமனூர் கூட்டுறவு வங்கியின் நிர்வாக குழு உறுப்பினர் திரு.ஆர்.பாலகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன்பின்னர் 21.10.2002ம் தேதியன்று சேமனூர் தொ.வே.கூ. வங்கியின் உறுப்பினர்களான காயம்பு, நாகவள்ளி, மகமாயி, தட்சிணாமூர்த்தி, கொன்னன், கதிரேசன் மற்றும் வனசா தேவி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன்பின்னர் 03.11.2002ம் தேதியன்று சேமனூர் தொ.வே.கூ. வங்கியின் உறுப்பினர்கள் பரமசிவம், பெருமாள், நளினி மற்றும் கூட்டுறவு சார்பதிவாளர் திரு.சீனிவாசன், போகளூர் முன்னாள் சரக மேற்பார்வையாளர் திரு.சண்முகநாதன், இராமநாதபுரம் தலைமை மத்திய கூட்டுறவு வங்கியின் உதவி பொது மேலாளர் திரு.பாஸ்கரன் போகளூர் சரக மேற்பார்வையாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் கூட்டுறவு விரிவாக்க அலுவலர் திரு.பிச்சை ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 26.11.2002ம் தேதியன்று பரமக்குடி சார்பதிவாளர் மற்றும் 81ன் கூட்டுறவு விசாரணை அதிகாரியான திரு.முத்துராஜ் என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் விசாரணையின் அடிப்படையிலும் சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களிலிருந்தும் 30.11.2002ம் தேதியன்று 1வது எதிரியின் மீது பிரிவு 408 இதச படியும், 2வது எதிரியின் மீது பிரிவு 408 r/w 34 இதச படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை -

இவ்வழக்கை ஏற்கனவே புலன் விசாரணை செய்த அதிகாரி ஆவணங்களையும், சாட்சியங்களையும் சரிவர பரிசீலிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை -

இல்லை.

(ஒப்பம்/- ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.